தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

அ.சா.7 நாள் 13.08.2026

| SC. No. | 132/2024 | | |
|---|---|---|---|
| பெயர் | ஜீவமணி | க/பெ. | சத்தியமூர்த்தி |
| வயது | 48 | தொழில் | கூலி வேலை |
| கிராமம் | எருக்கூர் | தாலுக்கா | சீர்காழி |

( எதிரி ஆஜர்,).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை

நான் எருக்கூரில் வசித்து வருகிறேன். பணித்தல பொறுப்பாளராக உள்ளேன். அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலானவர்களை தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. எனது அக்கா ஜெயசீலி சுமார் 2–3 வருடம் முன்பு அரவிந்துக்கு காயம் ஏற்பட்டதாகவும் சீர்காழி அரசு மருத்துவமனையில் அனுமதித்திருப்பதாக சொன்னார். நானும் எனது கணவர் சத்தியமூர்த்தியும் மருத்துவமனை சென்றோம். அவனுக்கு உடல் முழுக்க பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. SI மருமகன் சத்தியசீலன் ஃபோன் செய்து திருவெண்காட்டிற்கு வர சொன்னதாகவும், நான் அங்குதான் கோவிலில் இருக்கிறேன் என்று சொன்னதற்கு, திருவெண்காடு ஆர்ச்சுக்கு வரசொல்லி அரவிந்தை அசிங்கமாக பேசி, கம்பியாலும், கட்டையாலும் தலையிலும் உடல்முழுக்க அடித்து பலத்த காயம் ஏற்படுத்தியதாக எனது அக்கா சொன்னார். போலிசார் என்னை விசாரித்தனர். எனக்கு இந்த வழக்கை கேள்விப்பட்டுதான் தெரியும் நேரடியாக எதையும் பார்க்கவில்லை.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–

நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. கேள்விப்பட்டுதான் எல்லோரும் சென்றோம். எனது அக்காவும் பார்க்கவில்லை. அக்கா பையன்தான் சொன்னார்.

W. Jeevamani

<u>மறு விசாரணை</u> :-

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

8.1.3.8.1.26

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.